ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

09.10.2025

1. ஏழாம் படை வீடு படைத்துமே
எந்தனின் அவதார மகிமைதனை
உலகமெல்லாம் அறிய வேண்டி
உயர்வாய் அருளிடும் வேலவா போற்றி

2. போற்றியே ஆறுமுக அரங்கனும்
புகலுவேன் குருவார அருளாசி
ஆற்றல்பட விசுவாவசு நங்கை திங்கள்
அறிவிப்பேன் சதுர் குருவார ஆசியாக

3. ஆகவே பிரணவக்குடிலின் விழா
அன்பர்கள் நிர்வாகிகள் மனம்கனிய
வகை செய்து சிறப்பாய் நடந்து வர
வரம்பல என்னோடு பல ஞானிகளும்

4. ஞானிகளும் தந்து வருகின்றனர்
ஞாலமதில் பண்டிகை காலமதின்
இனிமைபட விழா சிறக்கவும்
என் தொண்டர்கள் நிர்வாகிகள்

5. நிர்வாகிகள் மகிழ தேவையான
நிதி வசதிகள் தந்து அருள்வேன்
நிர்வாகிகள் கரம்பட அரங்கனும்
நிதிஉதவி வஸ்திரம் என யாவும்

6. யாவும் மகிழ்வுபெற தந்தருள்வேன்
என் மக்கள் தொண்டர்கள் என்று
அவணியிலே சிறப்பாய் பண்டிகையை
அகிலமதில் கொண்டாடிட அருள்வேன்

7. அருளவே தொண்டு சிறக்கவும்
அன்னதான சேவை வளரவும்
வரமாக வசூல் நிதி பெருகவும்
வருகைதனை உலக மக்கள் தனை

8. உலக மக்கள் தனை குடிலை நோக்கி
உயர்வாக வந்து தருமவழி
பலம்பெற பெருமளவு உதவிபட
பாருலகில் நடந்திட வகை செய்வேன்

9. செய்யவே வெளிநாட்டிலுள்ள
சீடர் பெருமக்கள் யாவர்க்கும்
அய்யன் அரங்கன் எந்தன்
அறிவிப்பேன் பரிபூரண ஆசி உண்டு

10. உண்டான அவர்கள் வசூல் பணி
உயர் தொண்டாகச் சிறக்கவும்
கொண்டதொரு பாதுகாப்புக்கும்
கூறிடுவேன் பரிபூரண ஆசிதனை

11. ஆசி தந்து அனைத்து திக்கிலும்
அவர்கள் சரணாகதிக்கு தக்க
நேசமுடன் சர்வபலமும் தருவேன்
ஞானமுடன் பிறவா பேறும் அருள்வேன்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி